விலை ரூபா 7.50

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை - 27 | 10-02-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை - 357

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்
இல:-48A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சு.9305) 077-6059672

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மனப்பக்குவம் சிங்களத் தலைவர்களிடமில்லை!

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

**இலங்கைத் தீவை பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தியுள்ள தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மனப்பக்குவமும், தொடர்ச்சியான பங்களிப்பும் சிங்கள அரசியல் தலைவர்களிடம் இல்லையென விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை குறித்து ஐ.பி.சி.க்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறு அவர் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை நடாத்துவதற்கு சனாதிபதி சந்திரிகா எடுத்துள்ள முடிவானது சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவாகும்.

இலங்கைத் தீவை பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தியுள்ள தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மனப்பக்குவமும், தொடர்ச்சியான பங்களிப்பும் சிங்கள அரசியல் தலைவர்களிடம் இல்லை எனத் தெரிவித்துள்ள அன்ரன் பாலசிங்கம்



அவர்கள், மீண்டும் மீண்டும் சிங்கள மக்களிடம் ஆணைபெற

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் ஈ.பி.டி.பி.க்கு ஆதரவாக பிரச்சாரத்தில் குதித்துள்ள படையினர்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமக்கு வாக்களிக்குமாறு ஈ.பி.டி.பி. அமைப்பின் முக்கியஸ்தர்கள் சாவகச்சேரி உ[illegible]ரியன் கிராம மக்களிடம் நே[illegible]டையாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். படையினருடன் பேசி அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த வீடுகளை தாங்கள் விடுவித்துத் தந்திருப்பதால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமக்கே வாக்களிக்குமாறு ஈ.பி.டி.பி.யினர் அப்பிரதேச மக்களிடம் கோரியுள்ளனர்.

இதேவேளை, அங்கு சென்ற இராணுவ உயரதிகாரிகளும், ஈ.பி.டி.பி. அமைப்பினரது உதவிகளை மறக்காது நன்றியுடன் தேர்தலில் அவர்களுக்கு வாக்களிக்குமாறு அம்மக்களை கோரியுள்ளனர்.

இதனிடையே கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சாவகச்சேரி நகர சபையின் பொது விளையாட்டரங்கு மற்றும் கண்ணாடிப்பிட்டி மயானங்களிலிருந்து விலக தாம் தயார் என படையினர் கூறியுள்ளனர். ஈ.பி.டி.பி. தேச விரோதிகள் சகிதம் இப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் பணியை கூட்டமைப்பு நாளை மறுதினம் ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் பணி எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் பிரிவு) ரெலோ மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியன தங்கள் கட்சிகளின் சார்பில் நிறுத்தப்படவேண்டிய வேட்பாளர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் வியாழக்கிழமை சமர்ப்பிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டார். நேற்று திங்கள் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் திருமலை மாவட்டப் பிரதிநிதிகள் பங்குபற்றிய கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சிக் கலைப்புக்கு மங்கள கூறும் காரணங்கள்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு சி.சு.கட்சியின் ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீர மூன்று காரணங்களைக் கூறியுள்ளார். சமாதானப் பேச்சிலிருந்து வெளியேறுவதாகப் புலிகள் கூறியபோது மீண்டும் அவர்களைப் பேச்சிற்கு கொண்டு செல்வதற்கு ஐ.தே. முன்னணியால் முடியவில்லை.

புலிகள் இடைக்கால நிர்வாக யோசனைகளை முன்வைத்த போது அதற்குப் பதில் வழங்கும் நடவடிக்கையை ஐ.தே. கட்சி தாமதப்படுத்தியது. தேசியப் பாதுகாப்பில் தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்ற மூன்று காரணங்களையே அவர் கூறியுள்ளார். (32)

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக கடந்த நான்கு நாட்களாக விவசாயிகள் நடத்தி வந்த சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர

(8ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் நேற்று திருமலை விஜயம்

(திருகோணமலை)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண்ட் புரு ஹேறாவ்டே நேற்றுக்காலை திருகோணமலைக்கு விஜயம் செய்தார். பெப்ரவரி முதலாம் திகதி புதிய தலைவராகப் பொறுப்பேற்றதன் பின்னர் அவர் முதல் தடவையாக திருமலைக்கு விஜயம் செய்தார். காலையில் இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்த ஹேறாவ்டே பிற்பகல் 3 மணியளவில் விடுதலைப்புலிகள் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக்கைச் சந்தித்தார். சந்திப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது. இது ஒரு சம்பிரதாயபூர்வமான சந்திப்பு என்று தெரிவிக்கப்பட்டது. (25)

## காங்கேசன், திருமலைக்கு இந்தியக் கடற்படைக் கலம்

இந்திய கடற்படையின் கடற்கலம் ஒன்று கொழும்பு காங்கேசன்துறை, திருகோணமலைத் துறைமுகங்களுக்கு வருகை தரவுள்ளது. இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் பட்வேந்திரசிங் இவ்வாரம் சிறிலங்காவிற்குப் பயணம் மேற்கொள்ள இருந்து பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இவரது பயணத்தின் தொடர்ச்சியாக இந்த கடற்கலம் வருகை தரவுள்ளது.

## யாழ்.பல்கலை ஊழியர் போராட்டம் கைவிடப்பட்டது

(வடமராட்சி)

கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் முன்கெடுக்கப்பட்டிருந்த தொடர் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றுடன் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. அதையடுத்து நேற்று முதல் பல்கலைக்கழக ஊழியர்கள் அனைவரும் தொழிலுக்குத் திரும்புவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பதினைந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து தைமாதம் 8ம் திகதி முதல் ஊழியர் சங்கம் ஆரம்பித்திருந்த மறியல் போராட்டம் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கோரிக்கையை அடுத்து கால அவகாசம் வழங்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் உரிய கால அவகாசத்தினுள் வழங்கப்பட்ட உறுதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை கலைப்பு

(கொழும்பு)

வடமேல் மாகாணசபை நேற்று முன்தினம் கலைக்கப்பட்டுள்ளது. இச்சபையின் பதவிக்காலம் ஏற்கனவே முடிவடைந்துள்ளதையடுத்து இது கலைக்கப்பட்டுள்ளது. (32)

## நெதர்லாந்து வெளிவிவகார அதிகாரிகளுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நெதர்லாந்து அரசின் வெளிவிவகார அமைச்சக இராஜதந்திரிகளை நேற்று சந்தித்துக் கலந்துரையாடலை நடத்தியுள்ளார். ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண்டுள்ள இக்குழுவினர் நோர்வே, சுவிற்சர்லாந்து, ஜேர்மனி சென்ற பின் நெதர்லாந்து சென்றுள்ளனர்.

நெதர்லாந்து அரசின் வெளிவிவகார அமைச்சகத்தைச் சேர்ந்த கரிவான்பீக் பேராசிரியர் ஜோர்ஜ் பெரிக்ஸ் (முரண்பாட்டு ஆய்வுப் பிரிவின் தலைவர்) பேர்ட் கிளிம (ஆராய்ச்சி நிறுவனம்) டாக்டர் டிக்கிமிதோஎஸ்ற் (ஆசியப் பிராந்தியத்திற்கான சிரேஷ்ட கொள்கை வகுப்பு அலுவலர்) லோஸ் லமேட்ஸ் (சமாதான முன்னெடுப்புக்குறித்த சிரேஷ்ட கொள்கை ஆலோசகர்) ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.



# பாராட்டி வாழ்த்துகின்றேன்

பூநகரிக் கோட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கிளி/முழங்காவில் ம.வி.மாணவர்களாகிய S.சாந்திகன், R.சிவராஜ், V.வின்சிகா, P.ராகுலன், S.பானுவர்த்தினி, A.லவக்குமார், S.கம்சா, K.மயூரன் கிளி/பூநகரி நல்லூர் ம.வி. மாணவர்களான N.புவிசன், K,சோபனன், S.கௌசிகா, கிளி/கிராஞ்சி அ.த.க.பா. மாணவர் A.தமிழவன் ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். இம்மாணவர்களை கற்றலில் வழிகாட்டிய ஆசிரியர்கள், அதிபர்களையும் ஒத்துழைத்து உதவிபுரிந்த பெற்றோர்களையும் பர்ராட்டி வாழ்த்துகின்றேன்.

**பொ. விஜயநாதன்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
(ஆரம்பக்கல்வி)

(4225)

# திறப்புவிழா அழைப்பிதழ்

**எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட கமக் காரர் அமைப்புக்களின் சம்மேளன செயலகக் கட்டடத்தின் திறப்புவிழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடவுள்ளோம்.**

**காலம்:- 11.02.2004 புதன்கிழமை**
**நேரம்:- காலை 10.00 மணி**
**இடம்:- கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன செயலகம்.**

*பரந்தன் தெற்பண்ணை முன்பாக யாழ்சாலை, பரந்தன்.*

இந் நன்நிகழ்வில் அரசஅரசசார்பற்ற நிறுவன தலைவர்களையும் அனைத்து விவசாயிகளையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கிளி/மாவட்ட**
**கமக்காரர் அமைப்புக்களின்**
**சம்மேளனம்,**
**கிளிநொச்சி.**

(சி-9088)

## வரிவிளம்பரம்

### தேங்காய் விற்பனைக்குண்டு

இரட்ணம் பாம், சுதந்திரபுரம் மத்தி உடையார்கட்டில் நல்ல நிலையில் தேங்காய்கள் (01லோட்) விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். (4219)

### N.E.C

A-9 வீதி கிளிநொச்சி வணிக மானி பட்டப்படிப்பு வகுப்புகளும் கலை மானிப்பட்டப் படிப்பு (G.A.Q.), (B.A.) வகுப்புகள் 14-02-2004 அன்று ஆரம்பம். நேரம் 4.00 மணி.(4223)

### ஆசிரியர் போட்டிப்பரீட்சை

தமிழ்மொழிமூல ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான முன்னோடி வகுப்புகள் புதுக்குடியிருப்பு மாவீரர் படிப்பகத்திற்கு முன்பாக அமைந்துள்ள K.S.K கணினிப் பயிற்சி நிலையத்தில் சனி, ஞாயிறு நாட்களில் பி.ப. 1.30-3.30 வரை நடைபெறுகின்றன.-நிர்வாகம். (சி.8770)

### தவறிவிட்டது

எனது கைக்கடிகாரம் புதுக்குடியிருப்பு சந்திக்கும் ஈழநாதம் பதிப்பகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.விலாசம் சி. சந்திரன், கைவேலி. (சி.7147)

### சிங்கள வகுப்புகள் ஆரம்பம்

ஆண்டு 5 மாணவர்கள் தொடக்கம் அரச உத்தியோகத்தர்கள் வரை சிங்களத்தில் சரளமாகப் பேச,எழுத,வாசிக்கக் கூடியதான புதிய வகுப்புகள் 2004.02.15 ஞாயிறு காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மாவீரர் படிப்பகம் முன்பாக அமைந்துள்ள K.S.K கணினி பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன. ஆசிரியர்:- திரு.A.தேவசகாயம் (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி) நிர்வாகம். (சி.8771)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## சிவஸ்ரீ.கைலாச நாதக்குருக்கள் இராஜேஸ்வரக்குருக்கள்

கிளி/பல்லவராயன்கட்டு இ.த.க.பாடசாலை ஆசிரியரும் ஜெயபுரம் வழிப்பிள்ளையார் ஆலய பிரதமகுருவுமாகவுள்ள சிவஸ்ரீ கை.இராஜேஸ்வரக்குருக்கள் 26.01.2004 அன்று யாழ்மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதவான் திருமதி. S.நந்தசேகரன் அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் பல காலம் வாழ்ந்து சேவை செய்ய வேண்டும் என்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*திரு. திருமதி. விஜயநாதன்,*
*ஜெயபுரம்.*

(4224)



# 31ஆம் நாள் நினைவலையும் நன்றி நவிலலும்

## அமரர் முருகுப்பிள்ளை புண்ணியமூர்த்தி

(7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1940-04-17 | 2004-01-11 |

உயர்விற்காய் உழைத்திட்ட
உத்தமரே - நீர்
உடலால் மறைந்தாலும் - எம்
உள்ளத்தில் தினம் வீற்றிருப்பீர்.

எமது தந்தையின் பிரிவினை அறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்தவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-7153)

**குடும்பத்தினர்.**


# டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை

# DR. PONNAMPALAM MEMORIAL HOSPITAL

# 3ஆம் ஆண்டு நிறைவு விழா

**காலம் :10-02-2004 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி**
**இடம் : டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை வளாகம்**

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் நலன்கருதி*

*எமது சேவைகள்.*

- ★24 மணிநேர வெளிநோயாளர் சேவை
- ★உள் நோயாளர் விடுதிகள்
- ★நவீன ஆய்வுகூட வசதிகள்
- ★விசேட வைத்திய ஆலோசனைகள்
- ★சத்திர சிகிச்சைக்கூட வசதிகள்
- ★ஸ்கானிங்/ECG வசதிகள்
- ★பற்சிகிச்சைப்பிரிவு
- ★கண் சிகிச்சைப்பிரிவு
- ★மகப்பேற்று மருத்துவம்

வெகுவிரைவில் எமது ஆய்வுகூடத்தில் ஓமோன் பரிசோதனைகளும் மேற்கொள்ளவுள்ளோம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**நிர்வாகம்,**
**டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த**
**மருத்துவமனை,**
**கிளிநொச்சி.**

(சி-9089)



அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி சனாதிபதி வேட்பாளரான ஜோன் கெரி தனது ஆதரவாளர்களுடன் வேஜினியாவில் காணப்படுகிறார்.

# சனாதிபதி புஷ்சின் செல்வாக்கு சரிகிறது 44வீத அமெரிக்கர்களே அவருக்கு ஆதரவு!

## டைம்ஸ், சி.என்.என், ஊடகங்கள் கணிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கின் நாசகார ஆயுதங்கள் தொடர்பான பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் தொடர்பான நம்பிக்கை சரிந்து வருகின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் அவர் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என கருத்துக் கண்காணிப்புக்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

சனாதிபதி புஷ் ஈராக் யுத்தத்தை நியாயப்படுத்துவதற்கு தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றார். ஈராக்கில் நாசகார ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படாவிடினும் சதாம் ஹுசைன் அவ்வாறான ஆயுதங்களைத் தயாரிக்கும் திறன் கொண்டவராக காணப்பட்டார் என சனாதிபதி புஷ் தெரிவிக்கின்றார். இதனைத் தடுப்பதற்கு யுத்தம் புரிய வேண்டியேற்றப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் சதாம் ஹுசைனிடம் நாசகார ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஈராக்கை ஆக்கிரமித்தன. இந்த நிலைமையில் அமெரிக்கர்களில் 44சதவீதத்தினர் மாத்திரமே சனாதிபதி புஷ்சை நம்ப முடியும் என தெரிவித்துள்ளதாக டைம்ஸ், சி.என்.என். நிறுவனங்கள் மேற்கொண்ட கருத்துக் கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது.

## பறவைக் காய்ச்சல் மேலும் பரவுகிறது !

(பெய்ஜிங்)

சீனாவில் பறவைக் காய்ச்சல் நோய வேகமாகப் பரவிவருவதாக தெரிவிக கப்பட்டுள்ளது. புதிதாக 6 பகுதிகளுக்கு பறவைக்காய்ச்சல் நோய் பரவியுள்ளது என செய்திகள் தெரிவித்துள்ளன.

# ஈராக் போரில் ஜேர்மனின் நிலைப்பாடு சரியானதென தற்போது நிரூபணம்

## -வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

**ஈராக் மீதான யுத்தம் தவறானது என்பதால் அதில் பங்குகொள்ளப் போவதில்லை என எடுத்த முடிவு சரியானதென இப்போது நிரூபிக்கப்பட்டு விட்டது என ஜேர்மன் அறிவிக்கின்றது.**

ஜேர்மனியின் முனிச் நகரில் நடைபெறும் நேட்டோ அமைப்பு நாடுகளின் மாநாட்டிலேயே ஜேர்மன் இத்தகவலை கருத்தாக வெளியிட்டுள்ளது.

இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் ஜோய்காபிஷர் இதுபற்றி கருத்து வெளியிடுகையில; ஈராக் மீதான ஆக்கிரமிப்பு தவறானது என்பதை தற்போதைய நிகழ்வுகள் நிரூபித்துள்ளன.

ஈராக்கில் மறைத்து வைத்துள்ளதாக நம்பப்பட்ட பேரழிவுதரும் ஆயுதங்களை அமெரிக்கா இது வரை கண்டுபிடிக்காததைப்பற்றி எதுவும் குறிப்பிடாத போதிலும், ஈராக் மீதான போரில் எமது தெரிவு சரியானதே என நாம் இப்போது உணர்ந்துள்ளோம். ஈராக்மீதான போருக்கு தெரிவிக்கப்பட்ட காரணம் சரியானது என நாம் அப்போது நம்பவில்லை. அதை தற்போதைய நிகழ்வுகள் நிரூபிக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட்டும் கலந்து கொண்டுள்ளார். அவ்வேளை ஈராக்மீதான போர் சரியானதே என அவர் வலியுறுத்தினார்.

இது இவ்வாறிருக்க இவ்வருடம் ஜுலைமாதம் முதலாம் திகதி ஈராக்கின் இறைமை அதனிடம் மீண்டும் கையளிக்கப்பட்ட பின் அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுவதற்காக 9ஆயிரம் நேட்டோப் படையினரை ஈராக்கிற்கு அனுப்ப அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது. 19நாடுகள் அங்கம் வகிக்கும் இவ்வமைப்பில் போலாந்து தலைமையில் படையினரை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. எனினும் ஜேர்மன் தனது படைகளை அனுப்ப மறுப்புத் தெரிவித்துள்ளது. பிரான்ஸ் ஐ.நா.வில் புதிய தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டால் மட்டுமே தமது நாட்டுப் படைகள் ஈராக் செல்லும் என அறிவித்துள்ளது.

# இந்திய மக்களவைத் தேர்தல் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்

## -புதிய தேர்தல் ஆணையாளர்

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தல் திகதிகள் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுமென இந்தியாவின் புதிய தேர்தல் ஆணையாளர் கிருஸ்ணமூர்த்தி நேற்று தெரிவித்தார்.

13ஆவது இந்திய தலைமை தேர்தல் ஆணையராக தமிழகத்தைச் சேர்ந்த கிருஸ்ணமூர்த்தி நேற்று பொறுப்பேற்றுள்ளார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம்அவர்உரையாற்றுகையில்; மக்களவைத் தேர்தலுக்கான திகதிகள் தேர்தல் ஆணையாளரிடம் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுமெனக் கூறியுள்ளார்.

அத்துடன் மக்களவைத் தேர்தல் மூன்று மாதங்களுக்குள் நிறைவு பெற்று விடும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையகம் விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

ஒரிசா, ஆந்திரப்பிரதேசம், சிக்கி சட்டப் பேரவைகள் கலைக்கப்பட்டு விட்டதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.




பாக்தாத்துக்குத் தெற்கே 60 கி.மீ. தூரத்திலுள்ள சுவேரா நகரில் தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் நிலையத்தைச் சோதனையிடும் ஈராக்கிய பொலிசார்.

# பாக். இன் அணுவாயுத தொழில்நுட்பத்தை மூடிமறைக்க அமெ. இரகசிய உடன்பாடு

## அரசியல் ஆய்வாளர்கள் தகவல்

பாகிஸ்தானிலுள்ள இரகசிய அணுவாயுத தொழில்நுட்ப விபரங்களை மறைப்பதற்கு முஷாரப்புடன் ஒப்பந்தம் ஒன்றை புஷ் நிர்வாகம் செய்துள்ளதாக அமெரிக்க அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



டொமினிக்கன் குடியரசில் இரண்டு தலைகளுடன் பிறந்த இரண்டுமாதக் குழந்தை அவில்டாரெபேக்கா மாட்டினேஸ். இக் குழந்தை சத்திர சிகிச்சையின் பின் இறந்தமை தெரிந்ததே.

இவ் ஒப்பந்தத்திற்கமைய அல்-ஹைதா இயக்க பயங்கரவாதிகளை இவ் வசந்தகாலம் தொடங்குவதற்கு முன்னர் பாகிஸ்தானுக் குள்ளிருந்து முஷாரப் விரட்டியடிக்க வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் அணுவாயுதத் தொழில்நுட்பம் ஈராக், லிபியா ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்டதான தகவல்கள் உறுதி செய்யப்பட்ட நிலையிலும் அமெரிக்கா அது விடயத்தில் மென்போக்கை கடைப்பிடிக்கின்றமை தெரிந்ததே. அமெரிக்க வெளியுறவு அமைச்சின் செயலர் கொலின்பவல் பாகிஸ்தான் அணுவாயுத தொழில்நுட்ப இரகசியங்களை பாரியளவில் வெளிப்படுத்தவில்லை என தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய சனாதிபதி தேர்தலில் புட்டினை எதிர்த்தவர் மறைவு

(மொஸ்கோ)

ரஷ்யாவில் சனாதிபதி தேர்தலில் சனாதிபதி விளாடிமீர்புட்டினை எதிர்த்து போட்டியிடும் வேட்பாளர் இவான் ரிஸ்கி திடீரென மாயமாக மறைந்துள்ளார்.

இவரைத் தேடும் நடவடிக்கையில் ரஷ்யப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். புட்டினை கடுமையாக விமர்சித்து வருகின்ற இவர் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் 07 வேட்பாளர்களில் ஒருவரென்பது குறிப்பிடத்தக்கது.

# சொத்துக் குவிப்பு வழக்கை வேறிடத்துக்கு மாற்றும் ஜெயாவின் வேண்டுகை ஒத்திவைப்பு

## -வழக்கைத் தொடர கர்நாடகம் விருப்பம்

(பெங்களூர்)

வருமானத்திற்கு அதிகமான சொத்துச் சேர்த்த இரண்டு வழக்குகளை கர்நாடக மாநிலத்தில் விசாரிப்பதற்கு பதிலாக பாண்டிச்சேரி, ஆந்திரப் பிரதேசம் அல்லது கேரளத்தில்விசாரிக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா தாக்கல் செய்திருந்த மனுமீதான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் நேற்று ஒத்தி வைத்துள்ளது.

காவிரி நீர்ப் பிரச்சினையை கருத்திற்கொண்டு தான் பழிவாங்கப்படலாம் என அம் மனுவில் கூறியிருந்தார். எனவே இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் நலனைக்கருதி பெங்களூரிலிருந்து இவ் வழக்கை பாண்டிச்சேரிக்கு மாற்ற வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை கர்நாடக அரசின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் இரு மாநிலங்களிடையே அம்மாதிரி காழ்ப்புணர்ச்சி எதுவும் இல்லையெனவும், பெங்களூர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா ஆஜராகும் போது தகுந்த பாதுகாப்பளிக்க கர்நாடக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று உறுதியளித்துள்ளார்.

# தமிழக மக்கள் ஜெயலலிதாவுக்கு உரிய பாடத்தைப் புகட்டுவர்

## - வைகோவுடனான சந்திப்பில் கருணாநிதி

(சென்னை)

தமிழக மக்கள் எதிர்வரும் நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு உரிய பாடம் கற்பிப்பார்களென தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவுடனான சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு சென்னையில் நேற்று நடைபெற்றது. இருவரும் எதிர்கால தேர்தல் தொடர்பான விவகாரங்களை ஆராய்ந்துள்ளனர்.

# விளையாட்டு அரங்கு

## வி.பி.கிண்ணம் அவுஸ்திரேலியாவசம்

## இரண்டாவது இறுதிப் போட்டியிலும் இந்தியா படுதோல்வி

நேற்றுமுன்தினம் சிட்னியில் முடிவுக்கு வந்த வி.பி. கிண்ணத்துக்கான முக்கோண கிரிக்கெட்போட்டியில் அவுஸ்திரேலிய அணியினர் தம்மை கிரிக்கெட் உலகில் அசைக்க முடியாத சக்கரவர்த்திகள் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளனர்.

2001 வரை டெஸ்ட் போட்டிகளில்தொடர் வெற்றிகளைப் பெற்று வந்த இவர்கள், இந்தியாவிடம் ஒரு தடைக்கு முகம் கொடுத்தாலும் பின்னர் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக் கிண்ணப் போட்டியிலும் வென்றனர். இந்த நிலையில் அடுத்ததாக இந்திய மண்ணிலும் தமது சொந்த மண்ணிலும் இந்தியாவின் கனவுகளை எல்லாம் சிதறடித்து இரண்டு வெற்றிக் கிண்ணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

ஆயினும் இவ்வணியின் முன்னணிப் பந்து வீச்சாளர்கள் கிளன் மெக்ராத், ஷேன் வோர்ன் ஆகியோர் பங்கு பற்றாத நிலையில் அவ்வணியின் வீழ்ச்சி உறுதி என்று கணிப்பிடப் பட்டிருக்கலாம் எனினும் நடந்து முடிந்த போட்டிகளைக் கவனிக்கும் போது அவர்களிடம் சிறந்த பந்து வீச்சாளர்கள் அணியில் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வி.பி கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவுடன் ஆடிய இரண்டாவது ஒருநாள் போட்டியில் தோல்வி அடைந்த நிலையில் மேற்கூறப்பட்ட கருத்து எழுந்தது. எனினும் பிரட்லி, கிளெஸ்பி ஆகியோர் தங்கள் தவறுகளை திருத்திக் கொண்டு விளையாடி இந்திய அணிக்கு சவால் விடுத்துள்ளனர்.

இவ் ஒருநாள் போட்டிகளில் மூன்றாவது அணியாகிய சிம்பாவ்வே அணியைப் பொறுத்த வரையில் அது ஒருநாள் போட்டிகளில் ஒன்றிலேனும் வெற்றி கொள்ளாதிருப்பினும் முதல் தரமான அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுடன் ஆடிய ஆட்டங்கள் சிறப்பாகக் கருத முடியும். ஏனெனில் இந்திய அணியைப்போன்றுஅவ்வணி அவுஸ்திரேலிய அணிக்கு ஓட்டங்களை அள்ளி வழங்கிடவில்லை. ஒரு போட்டியில் அது 148 ஓட்ட வித்தியாசத்தில் தோற்ற. போதும் ஏனைய போட்டிகளில் அது சிறப்பாக களத்தடுப்பை மேற்கொண்டுள்ளது. சிலவேளை வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருப்பின் சிம். பாவ்வே இந்தியாவைவிட அவுஸ்திரேயாவிற்கு நெருக்கடி கொடுத்திருக்கமுடியும்.

எனினும் தமது மண்ணில் கிண்ணத்தை பறிகொடுத்த இந்தியா இந்த வி.பி.கிண்ணத்தைத் தட்டிச் செல்லும் கனவுடன் வந்து இவ்வாறான படுமோசமான நிலையில் தோல்வியுற்று திரும்புவது இந்திய ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமே. டெஸ்ட் தொடரிலும் ஒரு நாள் போட்டிகளிலும்ஆரம்பத்தில் சிறப்பாக ஆடிய இந்திய அணி அவுஸ்திரேலியாவுடனான இறுதி மூன்று போட்டிகளிலும் பொறுப்பற்ற நிலையிலேயே ஆடியுள்ளது. ஒரு சில போட் டிகள் செவாக், டெண்டுல்கார் ஆகியோரின் பங்களிப்பின்றி சோபையிழந்த ஆட்டங்களாக இருந்தது. அவர்களின் வருகை மகிழ்ச்சியளித்ததாயினும் கடைசிப் போட்டிகளில் அவர் களின் துடுப்பாட்டம் கேள்விக் குறியாகி விட்டது. இரண்டாவது இறுதியாட்டத்தில் பதான் பதானி ஆகியோர் ஆடிய விதம் சற்று ஆறுதலளித்தாலும் 5 முன்னணி வீரர்களின் ஆட்டமிழப்பு இந்திய அணிபற்றி மீண்டும் சிந்திக்க தூண்டியிருக்கின்றது.

அவுஸ்திரேலிய வீரர்கள் கில்கிறிஸ்டி,கெய்டன் இணை போன்றே ஆடக்கூடிய டெண்டுல்கார், செவாக் இணையின் ஆட்டம் இவ்விரு போட்டிகளில் சோபிக்காமை ஆச்சரியத்துக் குள்ளாக்கியுள்ளது. அத்துடன் இத்தொடரில் தொடர் சதங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்த லக்ஸ்மனின் துடுப்பாட்டம் எங்கே ஒழிந்தது என எண்ணத் தோன்றுகின்றது. ஒரு இணை இல்லாவிடிலும் அடுத்த இணை சிறப்பாக ஆடும் என எதிர்பார்த்தவர்களை இந்திய வீரர்கள் ஏமாற்றி விட்டனர்.

தனது ஒரு போட்டியில் சிறப்பாகப் பந்து வீசாததுபற்றி விசனமுற்று மிகுந்த கவனமெடுத்து பந்து வீசிய ஆஸி அணியின் பிரட்லியை பாராட்டாமல் இருக்க முடியாது. எனினும் இந்தியாவின் நம்பிக்கை தரும் பந்து வீச்சாளர் அனில்கும்ளேயும் தனது திறமையை வெளிக்காட்டாமை ஏன் என்பது புரியாத புதிராகவே உள்ளது. வளர்ந்து வரும் பந்து வீச்சாளர்கள் கிர்பான் பதான், பாலாஜி ஆகியோரின் பங்களிப்பை நோக்கும்போது அகர்கார், அனில் கும்ளே ஆகியோரின் பங்களிப்பு மிகவும் வேதனையளிக்கின்றது.

இந்நிலையில் இந்தியா தனது பாகிஸ்தான் சுற்றுப் போட்டியில் தமது தவறுகளைத் திருத்திக் கொண்டு களம் இறங்குமா என்பதே இன்றுள்ள கேள்வி. அதேபோல் இந்தியாவை வென்ற வெற்றிக்களிப்பில் திளைத்திருக்கும் ஆஸி அணியும் தான் சந்திக்கவுள்ள முன்னாள் உலக சம்பியனான சிறிலங்கா அணியுடனான போட்டியில் தனது நிலையை தற்காத்து நாடு திரும்புமா? என்பதுவே தற்போதைய எதிர்பார்க்கை ஆகும்.

**வடிவேல்**



## வெங்கட்ராகவன் ஓய்வு பெறுகிறார்

சர்வதேச கிரிக்கெட் மத்தியஸ்தரான வெங்கட்ராகவன் தனது பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த முன்னாள் பிரபல சுழற்பந்து வீச்சாளர் வெங்கட்ராகவன் இந் திய அணியின் முன்னாள் தலைவராக விளங்கியதுடன் தற்போது சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) நடுவராகப் பணியாற்றி வருகின்றார்.

இப்பணியில் இருந்து வெங்கட்ராகவன் அடுத்த மாதம் ஓய்வு பெறுகிறார். அவுஸ்திரேலியா - சிறிலங்கா அணிகள் கண்டியில் கலந்து கொ ளும் 2வது டெஸ்ட் போட்டியில் வெங்கட்ராகவன் நடுவராக இருப்பார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

இதுவே அவரது கடைசிப் போட்டியாகும். வெங்கட்ராகவன் உலகின் தலைசிறந்த நடுவர்களில் ஒருவர் என்று ஐ.சி.சி தலைமை நிர்வாகி ஸ்.மீல்ட் தெரிவித்தார். அவர் பதினொரு ஆண்டுகள் நடுவராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



வேகமும் வலிமையும் மிக்க றியல் மட்றிட் கழக பிறேசிலியன் ஆட்டக்காரர் றொணால்டோவின் (இடது) வெற்றிக் கோலைத் தடுக்கும் வலாடோலிட்ஸ் கழகத்தின் ஆட்டக்காரர் யூலியோசீசரைக் கடந்து கோல்மூலம் வெற்றியை அடைகிறார். நுட்பம் நிறைந்த இந்தக் கணங்களே வெற்றியைத் தீர்மானித்தன. 3-2 என்ற கோல்கணக்கில் றியல்மட்றிட் கழகம் வெற்றிபெற்ற இந்த ஆட்டம் வலாடோலிட் மைதானத்தில் இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்ற ஸ்பானிய உதைபந்தாட்டப் போட்டியில் இடம் பெற்றது.

## சிறிலங்கா–அவுஸ்திரேலிய போட்டித்தொடர் வியூகங்களுடன் அணிகள்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த முத்தரப்புக் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் இந்திய அணியை இலகுவாக வீழ்த்தி பெருவெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி வரும் 14ஆம் திகதி சிறிலங்கா வருகின்றது.

இவ்வணி தனது சொந்த மண்ணில் இந்திய அணியிடம்சிறிதுஆட்டம் கண்டபோதும், அதனை உடனுக்குடன் நிவர்த்திசெய்து தங்களது அணியின் கட்டமைப்பு உறுதியானது என் பதை மீண்டும் நிரூபித்துள்ளது.

இந்நிலையில் சிறிலங்கா வுக்கான அவுஸ்திரேலிய சுற்றுலா சவால் நிறைந்த ஒன்றாக இருக்கும் என்ற நிலைப்பாட்டில் எந்தவித ஐயத்துக்கும் இடமில்லை.

பொதுவாக தெற்காசிய ஆடுக ளங்கள் மேற்கத்தைய அணிகளுக்கு பாதகமான நிலையைத் தோற்றுவிக்கும் என்ற கருத்து பொதுவாக நிலவுகின்ற போதும் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னின் மீள்பிரவேசம் மற்றும் அணியில் புதுமுக வீரர்களின் அறிமுகம் என்பன சிறிலங்கா மண்ணில் அதன் வெற்றிப்பயணம் தொடரும் என கிரிக்கெட்விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க வேகப் பந்து வீச்சாளர்களையே பெரிதும் நம்பிக் களம் இறங்கும் இவ் அணிகள்சுழற்பந்து வீச்சுக்கும் மித வேகப் பந்து வீச்சுக்கும் சாதகமாக அமைக்கப்பட்டுள்ள தெற்காசிய ஆடுகளங்களில் பெரும் சவால்களை எதிர்நோக்குவது வழமையானது.

இந்நிலை அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை இல்லை என்ற நிலை காணப் படுகின்ற போதும், 2002ஆம் ஆண்டு நடைபெற்ற மினி உலகக்கிண்ணப்போட்டியின் அரையிறுதிப் போட்டியில் மிதவேகப் பந்து வீச்சாளர் அரவிந்த டி சில்வாவின் பந்து வீச்சில் மள மள வென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து. தோல்வியடைந்ததை மறந்துவிட முடியாது. எந்த அணிக்கும் சிம்மசொப்பனமாகத் திகழும் சுழற் பந்து வீச் சாளர் முரளிதரன் இப்போட்டித் தொடரிலும் அச்சுறுத்தலாக இருப்பார் என்ற கருத்து அவுஸ்திரேலியா அணியை சிந்திக்க வைக்கும் ஒன்றாகவே இருக்கும்.

ஏனெனில் தனது மாயப் பந்து வீச்சின் மூலம் போட்டியின் போக்கையே மாற்றிவிடும் தன்மையைக் கொண்டுள்ள இவர், அவுஸ்திரேலிய அணியின் வேகத்துக்கு முட்டுக்கட்டையாக அமைவதுடன் போட்டியில் திருப்பங்களை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதனால் ஒரு வருடத்தடைக்கு உட்பட்டிருந்த ஷேன்வோர்னை சிறிலங்கா சுற்றுலா அணியில் இணைத்துக் கொள் வதற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் முடிவு செய்துள்ளது.

சிறிலங்கா அணியை அதன் சொந்த மண்ணில் இலகுவில் தோற்கடிப்பதென்பது கடின மானது என உணர்ந்திருக்கும் அவுஸ்திரேலியா புதிய வியூகங்களுடன் வெற்றி பெறுவோம் எனத் தெரிவித்துள்ளது.

இதற்கான முழுத்தகைமைகளையும் அவுஸ். அணி கொண்டுள்ள போதும் சிறி லங்காவின் சுழற்பந்து வீச்சா ளர்களை எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவிப்பார்களா என்பதே இன்றைய கேள்வியாக உள் ளது.

இந்த நிலையில் இரு அணி களுக்கும் பலமும் பலவீனமும் காணப்படுவதால் இப்போட்டித் தொடர் அவுஸ்திரேலியாவின் திறமையைத் தொடர்ந்தும் சோதிப்பதற்கான தொடராகவே அமையப்போகின்றது.

**ஜெயந்திரன்**



# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான எனது ஆதரவு எப்போதும் போல் தொடரும்

## -வைகோ ஊடகவியலாளரிடம் அறிவிப்பு

**"தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு என்னுடைய ஆதரவு என்றும் தொடரும் என உறுதிபடக் கூறுகிறேன்" இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் வை.கோபால்சாமி தெரிவித்துள்ளார். ஊடகவியலாளரிடம் நேற்று முன்தினம் பேசுகையிலேயே அவர் இதனை மீண்டும் வலியுறுத்தினார்.**

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில; தமிழீழ மக்களின் போராட்டக் காலம் சரித்திரத்தில் இடம்பெற்றுள்ள சுதந்திரப் போராட்டம். இந்த விடுதலைப் போராட்டத்திற்கு என்றும் ஆதரவளிப்பேன்.

தமிழீழத்திலே ஒரு தீர்வு ஏற்பட வேண்டும் அது தமிழீழ மக்களுக்கு ஒரு அமைதியான, சுதந்திரமான வாழ்வைப் பெற்றுத்தர வேண்டும். இந்த நிலையில் தமிழீழ மக்களுடைய போராட்டத்திற்கு வைகோவின் ஆதரவு உண்டா என்ற கேள்வி அர்த்தமற்ற தொரு கேள்வியாகும். வைகோ என்றால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு என உலகம் எல்லாம் அழைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகப் பேசியதாக குற்றம்சாட்டி ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்து சுமார் 18மாதங்கள் சிறைவாசம் அனுபவித்த வைகோ அண்மையில் பிணையில் வெளிவந்துள்ளமை தெரிந்ததே.



# மெய்வன்மைப் போட்டி

கிளிதருமபுரம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று, வித்தியாலய முதல்வர் த.பூலோகராஜா தலைமையில் பி.ப.1.45 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (14)

# அறிவு கையேடு வெளியீடு

இராமநாதபுரம் ஆசிரிய மத்திய நிலையத்தினால் அறிவு கையேடு கடந்த 3ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. இக்கையேட்டின் ஆக்க முயற்சிக்கு உந்து சக்தியாக செயற்படும் ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் ந. செந்தில்வடிவேலை கிளி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ப.மார்க்கண்டு பாராட்டியுள்ளார். தொடர்ந்து மாதாந்தம் வெளியிடப்படும் அறிவுக்கையேடு வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் தங்கள் ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறு ஆசிரிய மத்திய நிலையத்தினர் கேட்டுள்ளனர். (14)

# தேர்தலில் புலிகள் பெரும்பலம் பெறுவராம்!

## சிஹல உறுமய கூறுகின்றது

(கொழும்பு)

சனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலை அவசரமாக அறிவித்ததன் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும்பலம் பெறப்போவதாக சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

தேர்தல் ஒன்றின் மூலம் நடைமுறை அரசியல் பிணக்கிற்கு தீர்வைக்காண முடியாது. தென்னிலங்கை கட்சிகளிடம் நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்தவொரு ஏற்பாடுகளும் இல்லை.

இந்த நிலையில் சிங்கள மக்களின் குரல்கள் நாடாளுமன்றத்தில் ஒலிக்கும் வகையில் தமது கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் களம் இறங்கப் போவதாக சிஹலஉறுமய கூறியுள்ளது. (32)

# வெளிநாடு சென்ற அமைச்சர்களை உடன் நாடு திரும்பப் பணிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள அமைச்சர்களை உடனடியாக நாட்டிற்குத் திரும்புமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

நாட்டின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த கட்ட நகர்வுகளுக்காகவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

தற்சமயம் அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்க, மகிந்த சமரசிங்க, மிலிந்த மொறகொட, ரவிகருணாநாயக்க ஆகியோர் இந்தியா, அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இவர்களையே உடனடியாக நாட்டிற்குத் திரும்புமாறு பிரதமர் அழைத்துள்ளார். (32)

# கடற்படையின் கெடுபிடிகள் அதிகரிப்பு கடற்றொழிலில் ஈடுபட மீனவர் அச்சம்!

(யாழ்ப்பாணம்)

கடற்படையினர் கெடுபிடிகள் அதிகரித்து வருவதால் வடமராட்சிக் கடற்றொழிலாளிகள் தொழிலுக்குச்செல்ல அஞ்சுகின்றனர்.

கடந்த 4ஆம் திகதி சிறிலங்காவின் 56வது சுதந்திரதினக் கொண்டாட்டத்தைகடற்தொழிலாளர்கள் கரிநாளாக அனுஷ்டித்ததுடன் அன்றைய தினம் தொழிலில் ஈடுபடாதும் பகிஷ்கரிப்புச் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து இவ்வாறு தமது எதிர்ப்பைக் காட்டிய கடற்றொழிலாளிகளின் விபரங்களைச் சேகரித்து வந்த கடற்படையினர் இவ்விபரங்களை அடிப்படையாகக் கொண்டு சில மீனவர்களைப் பழிவாங்கும் விதத்தில் பாஸ் நடைமுறை மற்றும் சோதனைக் கெடுபிடிகளில் இறுக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இதற்கு அஞ்சி பல மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதை இடைநிறுத்தியுள்ளதாகவும் தெரிய வருகிறது. (33)

# 2,50,000 பனம் விதைகள் யாழ்.குடாநாட்டில் நடுகை

கடந்த ஆண்டு யாழ். குடாநாட்டில் 2இலட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டிருப்பதாக பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் யாழ். குடாநாட்டுப்பகுதிகளில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் 20இலட்சத்துக்கும் மேற்பட்ட பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. தமிழ்மக்களின் தனிப்பெரும் வளமான இப் பனை வளத்தினை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு இந் நடுகைகள் யாழ். குடாநாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதைவிட மேலும் அதிகமான பனம் விதைகள் இவ்வாண்டு நடுகை செய்யப்படும் என்பதனை அபிவிருத்திச்சபை மேலும் தெரிவித்துள்ளது. (33)

# 174 புள்ளிகளைப் பெற்ற மாணவன் ஜப்பான் பயணம்

அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பெறுபேறுகளின்படி, திருகோணமலை மாவட்டம்- நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்திலிருந்து தோற்றி 174 புள்ளிகளைப் பெற்ற மாணவன் உதயகுமார் தட்சணன், இவ்வாண்டு ஜப்பானுக்குச் செல்லவிருக்கும் கல்விச் சுற்றுலாவில் இடம்பெற்றுள்ளார் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அகில இலங்கை ரீதியில் தட்சணன் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார். அகில இலங்கை ரீதியில் முதலாவது இடமும் இரண்டாவது இடமும் திருகோணமலை கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவருக்கே கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் ரவீந்திரதாஸ் அபிலாஷ 182 புள்ளிகளுடன் முதலாவது இடமும் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி மாணவன் விஜயகுமார் அனோப்ரியன் 180 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தாகள். (25)

## - வடக்கு - கிழக்கு மாகாணத்தில்-

# புலமைப் பரிசில் பரீட்சையில் கிராமப்புற மாணவர்களின் சித்தியெய்தல் அதிகரிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கிராமப்புறப் பாடசாலைகளிலிருந்து ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை கணிசமான அளவு இவ்வாண்டு அதிகரித்திருப்பதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மகாலிங்கம் தெரிவித்தார்.

மூதூர் கல்வி வலயம் மூன்று கோட்டங்களைக் கொண்டது. கடந்த ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 70 மாணவர்கள் வரையே சித்தியடைந்தனர். ஆனால் அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் படி இந்த எண்ணிக்கை 140ஆக அதிகரித்துள்ளது என்றும் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார்.

ஆலங்கேணி, ஈச்சந்தீவு, நிலாவெளி, முட்டுச்சேனை ஆகிய கஷ்டப்பிரதேசகிராமப் பாடசாலைகளிலிருந்து தோற்றிய மாணவர்களில் கணிசமான தொகையினர் 2003 ஆம் ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

அடிப்படைவசதிகள் குறைவாக இருந்தும் கற்பித்தல் முறையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட விசேட செயலமர்வுகள், அதற்கு மேலாக ஆசிரியர்களின் உணர்வுபூர்வமான ஊக்கம் ஆகியனவே கல்வி வளர்ச்சியின் எழுச்சியின் ஆரம்பமாக புலமைப் பரீட்சை பெறுபேறுகள் அமைந்துள்ளன என்றும் பணிப்பாளர் மகாலிங்கம் தெரிவித்தார். (25)

# வல்லைப்பாலம் புனரமைப்பு இடைநிறுத்தம் எவ்வேளையும் போக்குவரத்து தடைப்படலாம்!

கடந்த கால யுத்த அனர்த் தங்களால் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ள வல்லைப்பாலம் எவ்வேளையிலும் உடைந்து வீழலாம் என அச்சம்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் யாழ். பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்தும் எவ்வேளையிலும் துண்டிக்கப்படலாம் என்ற அபாயநிலை தோன்றியுள்ளது.

ஆங்கிலேயரது ஆட்சிக்காலப் பகுதியில் கட்டப்பட்டிருந்த குறித்த வல்லைப்பாலம் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டுவந்ததாயினும் 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலாலி இராணுவத்தளத்திலிருந்து முன்னேறிய படையினரின் 'ஆட்லறி'த்தாக்குதலால் பாரிய சேதத்திற்கு உள்ளாகியிருந்தது. அதைத் தொடர்ந்து இடம்பெற்ற சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது பாலத்தின் ஒரு பகுதி குண்டு வைத்து தகர்க்கப்பட்டுமிருந்தது.

எனினும் இப்பாலம் தற்காலிகமாக பணங்குற்றிகள் மூலம் திருத்தப்பட்டு தற்போது பாவனையிலுள்ளது. இதேவேளை இப்பாலப் பகுதியை மீள்நிர்மாணம் செய்ய வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகளும் போதிய நிதியின்மையால் தடைப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (27)

## -ஐ.ம.சு. கூட்டணியின்-

# கொள்கைப் பிரகடனத்தின் பின்பே ல.ச.கட்சி இணைவுபற்றி முடிவு செய்யும்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் வருங்காலத் தேர்தல் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்ட பின்னரே தமது கட்சி அதனுடன் இணைவது பற்றி முடிவு எடுக்கும் என லங்கா சமசமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

இக் கூட்டணி இனப் பிரச்சினைக்கு மக்களின் முன் வைக்கப்படும் தீர்வுத் திட்டத்துடன் இணங்குமாகில்தமது கட்சி மேற்படி கூட்டணியுடன் இணையும் என்று அக்கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டணியை தேர்தலில் தோல்வியடையச் செய்ய ல.ச.ச. கட்சி கடுமையாக முயற்சி எடுக்கும். என்றாலும் இனப்பிரச்சினைக்குத் தெளிவான தீர்வு ஒன்றை முன்வைக்காமல் தற்போதைய ஆளும் கட்சியைதோல்வியுறச்செய்யமுடியாது என தமது கட்சி கணித்துள்ளதாக வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

# செயற்பாடுகளற்றஅரசியல் கட்சிகளை தடைசெய்ய தேர்தல் ஆணையாளர் சிபார்சு

(கொழும்பு)

நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள முக்கிய அரசியல் கட்சிகளைத் தவிர்த்து அரசியல் ஸ்திரத்தன்மையும் செயற்பாடுகளும் இல்லாத கட்சிகளைத் தடைசெய்வதற்கான புதிய சட்டம் ஒன்றை தேர்தல் ஆணையாளர் செயற்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளார்.

இந் நாட்டில் 51 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் அநேக கட்சிகள் செயற்படாதபடியால் இவைகளைத் தடைசெய்யுமாறு தேர்தல் ஆணையாளர் செயற்குழுவுக்கு பரிந்துரைத்துள்ளார். இந்த கட்சிகளைத் தடைசெய்வதற்கு அரசியல் யாப்பில் இடம் உண்டு என தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டி உள்ளதுடன் இது சம்பந்தமாக இடைக்கால அறிக்கை ஒன்றை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளதாக மேலும் அவர் கூறியுள்ளார்.

# இடியன் துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

இடியன் துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.செல்லையா சிவகுமார் (வயது 36) காக்கைப்பனிச்சங்குளம் ஒட்டுசுட்டான் என்பவரே காயம்அடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் காலை 8.00 மணியளவில் அவரது வீட்டிலிருந்து துவிச்சக்கர வண்டி மீது இடியன் துவக்கை வைத்துக்கொண்டு செல்கையில் தவறுதலாக அது கீழே விழுந்து வெடித்ததில் இவர் படுகாயமடைந்துள்ளார்.இவரை சிகிச்சைக்காக திலீபன் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குகொண்டு செல்லப்பட்டுள்ளார்.

உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண சபை
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ அவ" கடன் இல.1846 - SRI(SF)

# கேள்வி கோரல் - இல.27

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக்கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ADB") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி தாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்டகேள்விகளைக்கோருகின்றனர்.

அட்டவணை

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD/IR/03 | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குளம் நீர்ப்பாசனத்திட்ட புனரமைப்பு - தொகுதி -03 வாய்க்கால் அமைப்பு | M6 | 63,000/= |
| 02 | VA/NECORD/HS/02 | வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி சுற்றயல் கூறு மீள் நிர்மாணித்தல் தொகுதி-01 | M6 | 69,000/= |
| 03 | TC/NECORD/IR/02 | திருகோணமலை மாவட்டத்தில் ஏதண்டமுறிப்பு நீர்ப்பாசத்திட்ட புனரமைப்பு -தொகுதி -02 வாய்க்கால் அமைப்பு. | M7 | 33,000/= |

03. பின்வரும் தகுதிகளைக்கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக் காரர்களின் கூறுவிலையிடல் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்டதேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தக்காரர்பதிவு செய்யப்பட் டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக ("ICTAD" உடன் M7க்கு மேலே பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருந்தல் வேண்டும். அத்துடன் 2003 ஆடி 1ஆம் திகதிக்குப்பின் [illegible] தங்களை பதிவு செய்த முல்லைத்தீவு, கிளிநொச்சி,அம்பாறை மாவட்டங்களிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமனான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாக அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக செய்திருத்தல்வேண்டும்.இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும் இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கோள்விகோருபவர் வே[illegible]டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் [illegible]க்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியஅளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாதது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலையடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 1.07.2003க்கு பின்பதிவு செய்யப்பட்டமுல்லைத்தீவு,கிளிநொச்சி, அம்பாறை மாவட்டங்களிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ முடித்திருந்தால் எந்த ஒரு நேரத்திலும் ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு NECORD திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.

05. தகுதி வாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை திட்டப்பணிப்பாளர், 140 ,மின்சாரநிலையவீதி, திருகோணமலை என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 026-2227434 , பக்ஸ் 026-2227401, ஈமெயில் necord@ Sltnet.lk

06. ஒப்பந்த ஆவணங்களை மாசி மாதம் 09இலிருந்து மாசி மாதம்20,2004 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, ரூ.1000 மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

07. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும், விலையிடப்பட்ட கேள்விகளினதும் இரண்டு பிரதிகளும் மெழுகிலைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

08. அவ்வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறியுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், NECORD,140,மின்சார நிலையவீதி, திருகோணமலை மாசிமாதம் 27,2004 பிற்பகல் 2.00மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

09. முன்கூட்டிய கேள்விகோரல் கூட்டமொன்று மேற்படி அலுவலகத்தில் மாசிமாதம் 19.ந்திகதி முற்பகல்11.30 க்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்பினால் அல்லது ஒப்படைப்பினால் கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

த.லங்காநேசன்,
கேள்விச்சபைத்தலைவர்
வடக்கு -கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் [நிகொட்]
140, மின்சார நிலையவீதி ,
திருகோணமலை.

(சி-8769)



**சிந்தனைக்கு**

இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 10-02-2004


## மக்களுக்குச் சோதனைக் காலம்!

சிங்கள மக்களைச் சிங்கள அரசியல்வாதிகள் தற்பொழுது பெரும் சோதனைக்குள்ளாக்கத் தொடங்கியுள்ளனர். நான்கு வருடத்திற்குள் மூன்று பொதுத்தேர்தல் என்பது சோதனை அல்லாது வேறு எதுவாக இருக்க முடியும்.

சிங்கள மக்களைப் பொறுத்து கடந்த மூன்று தேர்தலில் மட்டுமல்ல அதற்கு முன்னதான பொதுத் தேர்தலிலும் சரி, சனாதிபதி தேர்தலிலும் சரி இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமான அரசியற் தீர்வு என்பதற்காகவே வாக்களித்திருந்தனர். 1994 சனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் இவை இரண்டிலும் இருந்து கடைசியாக 2002இல் நடந்த பொதுத் தேர்தல் வரையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு ஆதரவாகவே மக்கள் வாக்களித்தனர்.

1994இல் சனாதிபதி சந்திரிகா சனாதிபதித் தேர்தலில் பெருவெற்றி ஈட்டுவதற்கு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என அளித்த வாக்குறுதியே காரணம். இலங்கையின் சனாதிபதித் தேர்தல் வரலாற்றில் இத்தகையதொரு வெற்றி சமாதானப் பெயராலேயே பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டதும் சனாதிபதி சந்திரிகா சமாதானம் தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். சமாதானத்தின் பெயரில் தனது ஆறாண்டு ஆட்சிக்காலத்தில் பெரும் யுத்தத்தையே அவர் நடத்தினார். சமாதானம் என்பது பெயரளவிலானதாக மட்டுமே இருந்தது.

ஆனால், சமாதானத்தின் பெயரில் சனாதிபதி சந்திரிகா நடத்திய யுத்தம் – சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கவில்லை. இதன்விளைவாகவே 2002ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் சமாதானம் தொடர்பாக வாக்குறுதிகள் அளித்த ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்கள் தமது வாக்குகளை அளித்திருந்தனர். ஐ.தே.முன்னணியும் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தது.

ஆனால், தேர்தல் வாக்குறுதியின்படி – சமாதான முயற்சிகளில் ஐ.தே.முன்னணி அரசாங்கம் ஓரளவிற்குத் தீவிரம் காட்டியது என்றே கொள்ளலாம். விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு உடன்பாடு, சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தம் என்பனவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

இச்சமாதான முயற்சி ஏ ஓரளவு முன்னேற்றகரமான நிலையை அடைந்த வேளை – ஏற்கனவே மக்களிடம் சமாதானத்தின் பெயரால் வாக்குப்பெற்று ஆட்சியில் இருந்தபோது சமாதானத்தின் எதிரிகளானவர்கள் தற்பொழுதும் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளையும் தோற்றுவிக்கத் தயாரான நிலையிலேயே இருந்தனர். ஆனால், இதில் உள்ள வேடிக்கை என்னவெனில் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைக் குழப்பியவர்களும் இனப்பிரச்சினைக்குத் தாமும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முற்பட்டு நிற்பதாகக் கூறிக்கொள்வதேயாகும்.

இத்தகையதொரு நிலையில் ஏப்–02இல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலிலும் பெரும்பாலான கட்சிகள் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் அரசியல் தீர்வு என்ற ரீதியிலேயே தமது கொள்கைப் பிரகடனங்களையும்,பிரச்சாரங்களையும் வெளியிடுவர் என எதிர்பார்க்கலாம். இந்நிலையில் சிக்கலுக்குள்ளாகப் போவது சிங்கள வாக்காளர்களே.

ஏனெனில், சிங்கள வாக்காளர்கள் சமாதானம் பற்றி கொள்கைப் பிரகடனம், வாக்குறுதிகள் என்பனவற்றை அளிக்கும் கட்சிகளுக்கு வேட்பாளர்களுக்கு வாக்குகள் அளிப்பதென்பது பொருத்தப்பாடானதொன்றாக இருக்கமாட்டாது. ஏனெனில் அது சமாதானத்திற்கான வாக்காக அது இருக்க மாட்டாது. சமாதானத்தின் பெயரால் யுத்தம் நடத்துவதற்கு ஆதரவாக அளிக்கப்படும் வாக்காகக்கூட மாறிவிடலாம்.

ஆகையினால், இம்முறையும் சிங்கள மக்கள் சமாதானத்திற்காகவே வாக்களிப்பவர்களாக இருப்பின் – அவர்கள் கொள்கைப் பிரகடனங்களுக்காக வாக்களிப்பதில் பயன்இல்லை. ஆட்சித் தலைமைகளின், குணாம்சங்கள், நடவடிக்கைகள் என்பன தொடர்பாக நன்கு பகுத்தாய்ந்த பின்பே வாக்களிக்க முடியும். அவ்வாறு இல்லாதுவிடில் மீண்டும் ஒரு தடவை சமாதானத்தின் பெயரில் சமாதானத்தின் விரோதிகளுக்கு வாக்களிப்பதாகவும் ஆகிவிடக்கூடும்.

இதனால் சிங்கள மக்கள் தேர்தல் வாக்களிப்பின் முன்பாக நிரம்பவே சிந்திக்க வேண்டிய தேவை உண்டு. அவ்வாறு சிந்திக்காது வாக்களிப்பார்களேயானால், அதிகார அபிலாசை கொண்ட அரசியல் தலைமைகளினால் மீண்டும் ஒரு தடவை ஏமாற்றப்படுவது மட்டுமல்ல, நாட்டையும் தம்மையும் மீள முடியாத நெருக்கடிக்குள் தள்ளி விடுவார்கள் என்பதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

# சுதந்திர தேர்தலுக்கு பொலிஸ், ஊடகத்துறை அதிகாரங்களை தேர்தல் ஆணையருக்கு வழங்குக

### -ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பெரும்பான்மையான மக்களின் விருப்பத்துக்கு மாறாக சனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார் என ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எவ்வாறு செயற்படுவது குறித்து ஐ.தே.கட்சி நேற்று கொழும்பில் நடத்திய ஊடகமாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

அவசர பாராளுமன்றத் தேர்தல் காரணமாக ஐ.தே.கட்சியின் அபிவிருத்தித் திட்டங்களில் தடங்கல் ஏற்பட்டுள்ளன இந்த நிலையில் சுயாதீனமாக தேர்தல் ஒன்று இடம் பெறுவதினை உறுதிசெய்யும் முகமாக பொலிஸ் மற்றும் ஊடகத் துறையின் அதிகாரங்கள் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் அவர் தெரிவிக்கும் போது; சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கும் விடயம் பொ.ஐ.முன்னணிக்கோ எதிர்க் கட்சித் தலைவருக்கோ தெரியாது. எனினும் ஜே.வி.பியினர் அறிந்திருந்தனர் எனவும் கடந்த சில காலங்களாக சனாதிபதியின் செயற்பாடுகள் அவருக்கே புரியாதிருப்பதாகவும் தெரிவித்தார். இந்த அரசு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் வரை பாராளுமன்றம் கலைக்க வேண்டியதில்லை என எழுத்து மூலம் சபாநாயகருக்கு அறிவித்திருந்த போதும் திடீரென அவர் கலைத்து விட்டார்.

இதுவொன்றும் அவருக்கு புதிதல்ல எத்தனையோ வாக்குறுதிகளை மீறியுள்ளார். 1995 லும் நிறைவேற்றதிகார முறையை மாற்றுவதாக ஜே.வி.பி.யிடம் வாக்களித்திருந்தார். இது வரையான எமது நடவடிக்கைகளை மக்கள் அறிந்திருப்பதால் நாம் புதிதாக பிரச்சாரம் செய்யப் போவதில்லை வரும் தேர்தலில் சனாதிபதிக்கு பாடம் புகட்டுவோம் இதனை விட கூடுதல் பலத்துடன் ஆட்சி அமைப்போம் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தமிழ்க் கட்சிகள் ஓரணியில் திரண்டால் 37 பாராளுமன்ற ஆசனங்களைப் பெறலாம்

### -ம.ம.மு. தலைவர் அபிப்பிராயம்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒரே சின்னத்தின் கீழ் களம் இறங்கினால் அதனால் 37 நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்ற முடியும் என மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் இந்த விடயம்குறித்து ஏற்கனவே பேசப்பட்டுள்ளதாகவும், வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தின் அனைத்து தமிழ்க் கட்சிகள் ஒரே சின்னத்தில் போட்டியிடலாம் அல்லது வெவ்வேறு சின்னத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த குரலில் போட்டியிட முடியும்.

ஒவ்வொரு தேர்தலிலும் பெரும்பான்மை கட்சிகளுக்கும் வாக்கு கேட்டுக் கொடுப்பதை பார்க்கிலும் தமிழர்களின் தனித்துவத்தை மேலோங்கச் செய்வது அவசியமாகியுள்ளது.

இந்த நிலைப்பாடு தொடர்பாக நேற்று முன்தினம் மாலை மலையக மக்கள் முன்னணி பிரதமரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இதேவேளை நாளை புதன் கிழமை தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அந்த முன்னணி பேச்சு நடத்தவுள்ளது. (32)

# வரப்போகும் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முஸ்லிம் மக்களின் விடுதலைக்கு வித்திடும்

### –அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

1977ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தல் தமிழ் சமூகத்தின் போராட்டத்துக்கு எவ்வாறு வித்திட்டதோ அதேபோன்று இந்த தேர்தல் முஸ்லிம் மக்களின் விடுதலைக்கு வித்திடப்போகிறது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவடைந்ததும் மீண்டும் ஒருமுறை இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக இலங்கை முஸ்லிம்கள் மாறுவார்கள் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அமைச்சுப் பொறுப்புக்கள் தமக்கு முக்கியமல்ல எனக் குறிப்பிட்ட அவர் முஸ்லிம் மக்களின் ஒருமித்த ஆதரவுடன் வெல்வதே தமது நோக்கம் எனக்குறிப்பிட்டார்.

இன்னும் ஒரு வருடத்துள் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் நடைபெறாது என எவராலும் உத்தரவாதம் அளிக்கப்பட முடியாது இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (32)

# நாடு அழிவுப்பாதையில் செல்வதைத் தடுத்த சனாதிபதியின் செயல் பாராட்டிற்குரியது

### -ஜே.வி.பி. பிரச்சார செயலர் கருத்து

(கொழும்பு)

நாட்டில் எந்தவொரு ஆட்சி நிர்வாகமும் இன்றி அழிவை நோக்கிச் செல்லும் வேளையில் சனாதிபதி பாராளுமன்றைக் கலைத்ததை தாம் வரவேற்பதாக ஜே.வி.பி.பிரச்சார செயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கலைப்புத் தொடர்பாக பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கும் போது மேலும் கூறியிருப்பதாவது; நாட்டில் தற்போது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் சமாதானம் என்ற போர்வையில் நாட்டைப்பிரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதுபோல அத்தியாவசியப் பொருட்கள் விலையால் வறிய மக்கள் பல இன்னல்களுக்குட்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த செயலை ஐ.தே.க. ஆதரவாளர்கள் மட்டும் விமர்சனம் செய்வார்கள் எனவும், எனினும் அதுபற்றி மக்கள் கவனிக்கமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்திரேலியா-உலகஅணிமோதல் சர்வதேச கிரிக்கெட் சபை ஆலோசனை

கிரிக்கெட் ஆட்டத்தில் முதனிலை வகிக்கும் அணிக்கும் ஏனைய 11 நாடுகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட நட்சத்திர வீரர்களைக் கொண்ட அணிகளுக்கும் இடையிலான சூப்பர் சீரிஸ் தொடரை நடத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை கொள்கையளவில் ஒத்துக் கொண்டுள்ளது.

இதன்படி டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் முன்னிலையிலுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும் உலக அணிக்கும் இடையேயான டெஸ்ட் போட்டி ஒன்றும் மூன்றுநாள் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

ஐ.சி.சி.யின் அடுத்த கூட்டம் அடுத்த மாதம் நியூசிலாந்தில் நடைபெறும் வேளை இதுபற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும்.

உலக அணிவீரர்கள் தரப்படுத்தல் மூலம் அல்லது குழுவொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர். எனினும் ஒரு சிலவீரர்கள் தமது அணி நிறையப் போட்டிகளில் கலந்து கொள்வதால் இதனை எதிர்த்துள்ளதாகவும் தெரிவித்திருக்கிறது.

# பாகிஸ்தான் வீரர்கள் அறிவிப்பு

சுமார் பதின்நான்கு வருடங்களுக்குப் பின் இந்தியாவுக்கெதிராக கிரிக்கெட் விளையாட்டில் பங்கு கொள்ளும் பாகிஸ்தான் பயிற்சி அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 22பேரைக் கொண்ட இவ்வணியில் எதிர்பார்க்கப்பட்ட வீரர்களான வேகப்பந்து வீச்சாளரான வக்கார் யூனிஸ், அஸார் மொகமட் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அறிவிக்கப்பட்ட அணிவிபரம் இன்சமாம் உல் ஹக், (அணித்தலைவர்) இம்ரான் பர்கத், தௌபிக் உமர், யாசிர் ஹமீத், யூசுப் யோகானா அசிம் கமால ,மிஸ்பா உல்ஹக், அப்துல் ரஸாக், ஸோயிப் மாலிக், சக்லைன் முஸ்டாக்,டனிஸ் கனேரியா,மொயின் கான்,(வி.கா) சோயிப் அக்தார், மொகமட்சமி,ஷபிர் அகமட்,உமர் குல், ராணா நவிட் உல் ஹஸன், லோ இவ்திகார் சதாப் கபீர் இப்பயிற்சி அணியில் சிறப்பாக விளையாடும் வீரர்கள் 14 பேர் இறுதியணியில் பங்கேற்பர்.



# பாராளு. கலைத்து இரு அமைச்சர்களை நியமித்தது சனநாயக விரோத செயல்

## அமைச்சர் பீரிஸ் கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்றைக் கலைப்பதற்கு சனாதிபதி எடுத்த தீர்மானம் சனநாயக ரீதியற்றது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதமமந்திரிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருக்கும் வேளையில், சனாதிபதி எந்த வகையிலும் தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்றும் நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து இரு அமைச்சர்களை நியமித்தமை சனநாயக விரோத நடவடிக்கையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து இது தொடர்பாகத் தெரிவிக்கையில், காபந்து அரசாங்கம் ஒன்றில் அமைச்சர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பது சனாதிபதி அல்ல பிரதமரே எனவும், சனாதிபதியின் இச் செயல் முற்றிலும் பண்பாடற்றது எனவும், எந்தவொரு அரசாங்கமும் அரசியல் யாப்பிற்கு அமைய சில பிரமாணங்களின் அடிப்படையிலேயே இயங்க வேண்டும். அரசியல் யாப்பின் விதிகளைச் செயற்படுத்தும் போது சில சம்பிரதாயங்களை முக்கியமாகக் கருத வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

குறைந்த பட்சம் சனநாயகத்தை மதிப்பதாயின் எந்த விதத்தில் இரு அமைச்சர்களை நியமிக்க முடியும்? இந்த அமைச்சர்களுக்கு யார் ஆணையை வழங்கினார்கள். இவர்கள் சனாதிபதியின் அமைச்சர்களாக இதற்கு முன்னர் இருந்துள்ளனர். மக்கள் அந்த அரசாங்கத்தை நிராகரித்துள்ளனர் என்றும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லை. மாவட்ட ஒப்பந்தக்காரர்களுக்கான வேலைப்பட்டறை

நிகோட்,ஜி.ரி.சற்,ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து வடகிழக்கு ஒப்பந்தக்காரர்களின் செயற்றிறனை முன்னேற்றுவதற்கான வேலைப்பட்டறை அமர்வுகளை எட்டு மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்துள்ளன.

இந்த வரிசையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான வேலைப்பட்டறை நிகழ்வுகள் எதிர்வரும் 18ம், 19ம், 20ம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வேலைப்பட்டறை நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட ஒப்பந்தக்காரர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விடுதலைப்புலிகளின் துறைசார் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் நிதித்திட்டமிடல்,பண அசைவு, முன்னறிக்கூற்று, முன்னேற்றத்தையும் செலவுக் கட்டுப்பாட்டையும் கண்காணித்தல், தரக் கட்டுப்பாடு, தளதிட்டமிடல், வளங்களை அட்டவணைப்படுத்துதல், இயந்திர உபகரணமுகாமைத்துவம், நிர்மாண பாதுகாப்பு, வரைபட விளக்கம், ஒப்பந்தக்காரர்களுக்கான கணக்கீடு உள்ளிட்ட பலவிடயங்கள் குறித்து விரிவுரைகள் நடைபெறவுள்ளது.

## சிகிச்சை

வெளிநாட்டிலிருந்து வருகைதந்த பெண் நோயியல் வைத்திய நிபுணர் அவர்களால் ஆழியவளையிலும், பூநகரியிலுமுள்ள தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப் படவுள்ளது.

## விபத்தில் காயம்

(அலுவலகசெய்தியாளர்)

முச்சக்கரவண்டி உந்துருளியை மோதியதில் உந்துருளியினை ஓட்டிச் சென்ற பெண்மணி படுகாய மடைந்தார். மேற்படி சம்பவம் நேற்றுப் பகல் 11.30 மணியளவில் கிளி.மத்திய கல்லூரிக் கருகாமையில் ஏ.9 வீதியில் இடம்பெற்றது.

அரசசார்பற்ற நிறுவனமொன்றில் பணிபுரிபவரான செல்வி கிமிலதா (வயது28) என்ற பெண்மணியே மேற்படிசம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். தமிழீழவீதிப்போக்குவரத்து காவல்துறையினர் சம்பவம் குறித்து விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

# கிராமிய அபிவிருத்திவங்கியின் வவு.கிளை நேற்றுத்திறப்பு

கிராமிய அபிவிருத்தி வங்கியின் வவுனியாக் கிளை நேற்று அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. காலை 10.45 மணிக்கு வவுனியா கிளை மேலாளர் மதியழகன் தலைமையில் யின் நடவடிக்கையினை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் கனகராயன் குள கிராம சேவையாளர் தணிகாசலம், கனகராயன்குளம் வடக்கு கமக்கார அமைப்பு தலைவர் ஆனந்த நடராசா, கிராமிய அபிவிருத்தி வங்கி



ஆரம்ப மான நிகழ்வில் மங்கல விளக்கினை மாவீரர் சுடர்நிதியின் தந்தையாரும், கனகராயன்குள தமிழீழ காவல் பணிமனைப் பொறுப்பாளரும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர். எழிலன் ஏற்றி வைத்தார். வங்கியின் பெயர்ப் பலகை யினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சு.மதன்ராஜ் திரைநீக்கம் செய்துவைத்ததனைத் தொடர்ந்து வங்கியின் அலுவலகத்தினை அரசியல்துறை துணைப் பொறுப் பாளர் சோ. தங்கன் அவர்கள் நாடா வினைவெட்டி வங்கி பணிப்பாளர் ப.சுஜன் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினார்கள். சிறப்புரையினை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கனகராயன்குள பிரதேசப்பொறுப்பாளர், மாவட்ட (வவுனியா) வனவளப் பகுதிப் பொறுப்பாளர், மற்றும் அப்பகுதி கமக்கார அமைப்புக்கள்,வங்கியின் வழமைதாரர்கள்,விவசாயிகள், கிராம சேவையாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வின் நன்றியுரையினை கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொதுமுகாமையாளர் செ.தவக்குமார் நிகழ்த்தினார்.

# தேர்தல் அறிவிப்பையடுத்து தேச விரோதக்குழுக்கள் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

பொதுத்தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகள் யாழ். மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் 02 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களும், அவர்கள் சார்ந்த கட்சிகளும் தேர்தல் பிரச்சாரங்கள் மற்றும் தேர்தலை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவிர்ந்த தமிழ் விரோத குழுக்களும் அவர்கள் சார்ந்த கட்சிப் பிரமுகர்களும் யாழ்ப்பாணத்தில் கூடியுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் யாழ்ப்பாணத்தை விட்டு விலகியிருந்த இக்குழுக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் நடமாடத் தொடங்கியுள்ளமை மக்கள் மத்தியில் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. (33)

# புலிகள் சைனட்டுடன் செல்ல தடை எதுவும் விதிக்கவில்லை

*– சிறில. வவு. மாவட்ட இராணுவத் தளபதி*

(செட்டிகுளம்)

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சைனட் குப்பியுடன் வரலாம். இதில் எந்த விதமான மாற்றமும் இல்லை. இவ்வாறு வன்னி இராணுவ கட்டளைத் தளபதி சிசிர விஜயசூரிய நேற்று வவுனியா போர் நிறுத்த கண்காணிப்புக்குழு காரியாலயத்தில் இடம்பெற்ற சந்திப்பில் தெரிவித்தார். கடந்த 5 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியில் இரண்டு விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் சைனட் குப்பியுடன் பிரயாணம் செய்த போது தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனையடுத்தே இன்றைய சந்திப்பில் இது தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் போது கருத்துத் தெரிவித்த சிசிர விஜயசூரிய தனக்கும் இந்த சம்பவத்துக்கும் தொடர்பு இல்லை என்றும் தனக்கு இது பற்றித் தெரியாது என்றும் இவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்றமைக்கு மனம் வருந்துவதாகவும் தெரிவித்தார். இனிமேல் இவ்வாறு எதுவும் இடம்பெறாது என்றும் தெரிவித்துள்ளார். (21)

### யாழ்...

மொழிகளை பல்கலைக்கழக நிர்வாகம் நிறைவேற்றிபிராத நிலை யில், மீண்டும் கடந்த 2ம் திகதி முதல் ஊழியர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்திருந்தனர். இந்நிலையில் தமிழீழ கல்விக் கழகத்தின் அனுசரணையுடன் நேற்று பல்கலைக்கழக நிர்வாகத் திற்கும், ஊழியர் சங்கத்திற்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களையடுத்தே பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (27)

### உண்ணா...

முன்னணியின் கீழ் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்படுமென சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்க அறி வித்ததை அடுத்து உண்ணாவிரதத்தை விவசாயிகள் கைவிட்டதாகக் கூறப்படுகிறது.

### யாழ்.இல்...

பகுதிகளுக்கு அண்மையில் சென்ற யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, இவ்வுறுதி மொழியை வழங்கியதாகத் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக தமது அமைப்பு விடுத்த கோரிக்கைகளை அடுத்தே யாழ். மாவட்ட தளபதி இவ் உறுதி மொழிகளை வழங்கியதாக ஈ.பி.டி.பி.யினர் சாவகச்சேரி நகர சபை நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, ஈ.பி.டி.பி. அமைப்பின் அலுவலகங்களுக்கான பாதுகாப்பை படையினர் அதிகரித்துள்ளனர். யாழ் நகரின் ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ். மாவட்ட தலைமையலுவலகமான ஸ்ரீதர் திரையரங்கு, சாவகச்சேரி மற்றும் தீவக அலுவலகங்களுக்கே தீவிர பாதுகாப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே சாவகச்சேரி கரையண்டி கரையோரப் பகுதிகளை ஈ.பி.டி.பி.யினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். இராணுவ பிக்கப் வாகனங்களிலும் மோட்டார் சைக்கிளிலும் பெருமளவு படையினர் பாதுகாப்பளிக்க இவர்கள் வந்து திரும்பியுள்ளனர்.

இப்பகுதிகளிலிருந்து விலகுவதாக கரையோர பாதுகாப்பு வேலிகளை பின்நகர்த்தும் வேளையில் படையினர் கடந்த சில தினங்களாக மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். அப்பணிகளையே ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (27)

### வேட்பாளர்....

பின்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உப தலைவரும் திருமலை மாவட்டக் கிளைத் தலைவருமான சதாசண்முகநாதன் ரெலோவின் திருமலைப்பிரமுகர் கா.லோகீஸ்வரன் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ்) திருமலை மாவட்ட அமைப்பாளர் எஸ் ரகுநாதன் சட்டத்தரணி கா.சிவபாலன் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். எதிர் வரும் பொதுத் தேர்தலில் கட்சியின் சின்னத்துக்கு வாக்களியுங்கள் என்று மாத்திரம் வாக்காளர்களைக் கோருவது என்றும் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (25)

# தேர்தலுக்கான நடவடிக்கைகள் ஆணையாளரால் ஆரம்பம்

(கொழும்பு)

வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய சகல மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளையும் உதவித் தேர்தல் ஆணையாளரையும் கொழும்பிற்கு அழைத்து தேர்தலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தீர்மானித்துள்ளார்.

இந்தக் கூட்டம் வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணிக்குத் தேர்தல் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு வாக்காளர் அட்டவணை செல்லுபடியாகும் என்று தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு வாக்காளர் அட்டவணை இதுவரை பூர்த்தி செய்யப்படாமையினாலேயே இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு வாக்காளர் அட்டவணையின் படி வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைக்கும் எனவும் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடி இருபத்தி எட்டு இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து முப்பது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கை 225 ஆகும்.

இவர்களில் 196 பேர் வாக்களிப்பின் மூலமும் 29 பேர் தேசியப் பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள்.

### இனப்பிரச்சினைக்கு...

எடுக்கப்படுகின்ற முயற்சிகள் இந்த அரசியல் வெறுமையையும், ஆற்றாமையையும் எடுத்துக் காட்டுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் சிங்கள ஆளும் வர்க்கம் மத்தியில் நிலவும் வெறிபிடித்த அதிகாரப் போட்டியும், பகைமையும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நீதி வழங்க மறுக்கும் கடும் போக்கும் இலங்கையின் அரசியல் உறுதி நிலையை ஆழமாக ஆட்டம் காண செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர்,

தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கும், பாதுகாப்பான வாழ்விற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக கூறியுள்ளார். சமாதானத்திலும், சமாதான வழிமுறையிலான தீர்விலும் தமக்கு ஆழமான நேர்மையான பற்றுறுதி இருக்கின்றது என்பதனை புலிகளின் தலைமைப்பீடம் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாது உலகத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளது.

கொழும்பில் அரசியல் நெருக்கடியும், குழப்ப நிலையும் நிலவியபோதும் புலிகள் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து இறுக்கமாகக் கடைப்பிடித்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் உறுதியாக இருப்பார்கள்.

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தாமதங்கள் ஏற்படலாம். இந்நிலையைக் கருத்திற்கொண்டு அவசர மனிதாபிமான தேவைகளை எதிர்நோக்கி நிற்கும் எமது மக்களுக்கு உடனடியாக நிவாரணம் மற்றும் அவசர உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் முன்வர வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையும், அரசியல் அபிலாசைகளையும் அங்கீகரித்து தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வு காண முன்வரும் அரசியல் சக்திகளுக்கு ஆதரவு வழங்குமாறு சிங்கள மக்களுக்கு அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் தமிழ் மக்களுடன் சமாதானமாக, ஒற்றுமையாக, ஐக்கியப்பட்டு வாழ்வதா? அல்லது தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமையை பிரயோகித்து பிரிந்து சென்று தனி அரசை அமைப்பதற்கு அவர்களை நிர்ப்பந்திப்பதா? என்ற இறுதி முடிவை சிங்கள மக்கள் தான் இத்தேர்தலில் முடிவெடுக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.